








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஜனவரி - 01.01.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்
- புத்தகங்கள்











## இந்திய நிகழ்வுகள்

- **இந்தியாவில்** உள்ள கிராமப்புறங்களில் மிக அதிக அளவிலான **இணைய இணைப்புடன் கூடிய அறிதிறன் பேசிகள்** பயன்பாட்டில் **தமிழகமானது 2வது இடத்தில்** உள்ளதாக மத்திய தகவல் தொடர்புதுறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
    - முதலிடத்தில் இமாச்சலப் பிரதேசம் உள்ளது.

- மத்திய பிரதேச அரசானது **குனோ பல்பூர் வனவிலங்கு** சரணாலயத்தினை, **தேசிய பூங்காவாக** அறிவித்துள்ளது.
    - இப்பூங்காவானது, ஆசிய சிங்கங்களை குஜராத்தின் கிர் காடுகளிலிருந்து இடமாற்றும் திட்டத்திற்காக மேம்படுத்தப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **நோயைக் கண்டறிதலின் போது** நோயாளிக்கு ஏற்படும் **வலியின் துல்லியத் தன்மையை** கண்டறியக் கூடிய **கருவியை வடிவமைத்ததற்காக**, **"டிஜிட்டல் மாற்றத்திற்கான ஹக்கத்தான் விருது"** இந்திய அமெரிக்கரான **"மகும் சித்கி"** என்பவருக்கு வழங்கப்பட்டது.
    - இப்போட்டியானது நியூயார்க்கின் கர்னெல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

We Shine Academy™

## விளையாட்டு செய்திகள்

- **சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்** (ICC) சார்பில், **2018ம்** ஆண்டிற்கான **சிறந்த வீராங்கனையாக** இந்தியாவின் கிரிக்கெட் வீராங்கனை **"ஸ்மிரிதி மந்தனா"** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
    - இவர், ICC ன் சிறந்த வீராங்கனை விருது பெறும் 2வது இந்திய வீராங்கனை ஆவார்
    - 2007ல் ஜீலன் சோஸ்வாமி இவ்விருதை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **வளிமண்டல சுழல், விண்வெளி சூழல் கண்காணிப்பு, பேரிடர்களை**

**தடுத்தல் மற்றும் குறைத்தல் மற்றும் அறிவியல் சார்ந்த ஆய்வுகளை** மேற்கொள்வதற்காக **சீனாவானது யுன்ஹாய் – 2** என்ற செயற்கைக்கோளை விண்வெளி சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.

## நியமனங்கள்

- **மத்திய தகவல் ஆணைத்தின்** புதிய தலைமை ஆணையராக **"சுதிர் பார்கவா"** நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவர், ஏற்கனவே இருந்த R.K. மாத்தூர் ஓய்வு பெற்றதை அடுத்து நியமிக்கப்பட்டுள்ளார்.
- **தெலுங்கான** மாநில **உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக "T.B.N. ராதா கிருஷ்ணன்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவருக்கு தெலுங்கானா ஆளுநர் E.S.L. நரசிம்மன் (E.S.L. Narasimhan) பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தினம் - ஜனவரி 1** (DRDO Day – Jan.1)
  - நாட்டின் ஆயுதப் படைகளுக்கு ஏவுகணைகள், ரேடார்கள் போன்ற ஆயுதங்களை தயாரித்து வழங்கும் DRDO (Defence Research and Development Organisation) நிறுவப்பட்ட தினமான ஜனவரி 01ம் தேதி, DRDO தினமாக கொண்டாடப்பட்டது.
  - நோக்கம்: "Strength's origin is in Science"

## புத்தகங்கள்

- **தமிழ்நாடு முதலமைச்சர்** இந்தியா சிமெண்ட்ஸ் தலைவர் **N. சீனிவாசனைப்** பற்றிய **"Defying the Paradigm N. Srinivasan : Fifty Years of an extraordinary journey"** என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
  - இந்த புத்தகமானது கல்யாணி கேன்டாடி என்பவரால்

எழுதப்பட்டது.